Judicial Form No.60
CALENDAR AND JUDGMENT
(For use in cases whether there are more accused persons than one)
District of Tenkasi
Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commencement of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 22.10.2014 | 22.10.14 | 29.10.2014 | 29.10.2014 | 04.06.26 | 05.06.26 | 12.06.2026 |
| C.S.D. 05.02.15 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D 05.05.20 | | | | | | |
| D.Cogni.05.05.20 | | | | | | |
| A.P.D. 27.11.25 | | | | | | |

Judgment in CC 27/2020 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Tenkasi P.S in Cr.No.428/2014

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1. Thiru.Aravind | 21/14 | Kumar |
| 2.Thiru. Madhavan | 23/14 | Mani |
| 3. Thiru. Baskar | 25/14 | Murugan |
| 4.Manikandan | 24/14 | Manikandan |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Tenkasi | Tenkasi PS |

**Offence** : Section 294(பி), 323, 324,427,506(2) IPC
**Sentence** : A1, A2 are found not guilty 294(பி), 323, 427, 506(2) IPC and A3, A4 are found not guilty 294(பி), 324, 427, 506(2) IPC and the accused are acquitted Sec.248(1) of Crpc.,

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.12 11:35:00 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026ம் வருடம் ஜீன் திங்கள் 12ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 27/2020
CNR.No.TNTS02-000394-2020

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
தென்காசி கா.நி.கு.எண் 428/2014 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1.அரவிந்த் (வயது 21/2014)
த.பெ.குமார்,
மேலப்பாறையடி தெரு,
தென்காசி.
2. மாதவன், (வயது 23/2014)
த.பெ. மணி,
மேலப்பாறையடி தெரு,
தென்காசி.
3. பாஸ்கர் (வயது 25/2014)
த.பெ. முருகன்,
மேலப்பாறையடி தெரு,
தென்காசி.
4. மணிகண்டன், (வயது 24/2014)
த.பெ,குமார்,
மேலப்பாறையடி தெரு,
தென்காசி. ... எதிரி

இவ்வழக்கு 05.05.2020 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.எஸ்.சிவக்குமார்** அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## <u>தீர்ப்புரை</u>

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u> –

22.10.2014 ம் தேதி 15.00 மணிக்கு தென்காசி மேலப்பாறையடி தெருவிலுள்ள 1வது சாட்சியின் வீட்டின் முன்பு, 1 மற்றும் 2வது சாட்சியும் நின்று பேசிக் கொண்டிருக்கும் போது, மேலே கண்ட எதிரிகள் 4 பேரும் சேர்ந்து கையில்

ஆளாளுக்கு கம்பு மற்றும் செங்கலோடு வந்து 1வது சாட்சியை பார்த்து 1வது மற்றும் 2வது எதிரியும் சேர்ந்து என்னல தேவிடியா மவனே நீ என்ன பெரிய ரவுடியால கூதிமவனே என்று அசிங்கமாக பேசியும் எதிரிகள் கையில் வைத்திருந்த கம்பால் சாட்சியின் இடது கால் முட்டுக்கு கீழும் இடது முழங்கைக்கு கீழும் அடித்து சாதாரண காயத்தை உண்டு பண்ணியும், அதை தடுக்க வந்த 2வது சாட்சியை பார்த்து 3 மற்றும் 4வது எதிரி இருவரும் சேர்ந்து நீ என்ன அவனுக்கு சப்போட்டால என்று அசிங்கமாக பேசிக்கொண்டு கையில் இருந்த செங்கலால் 2வது சாட்சியின் வலது கால் பெருவிரலிலும் மூக்கிலும் அடித்து சாதாரண காயத்தை உண்டு பண்ணியும் பின்பு 4 எதிரிகளும் சேர்ந்து 1வது சாட்சியின் வீட்டின் மீது கல்லை கொண்டு எறிந்து சுமார் ரூ.75 மதிப்புள்ள ஜன்னல் கண்ணாடியை உடைத்து சேதத்தை உண்டு பண்ணியும் 1மற்றும் 2வது சாட்சிகளை பார்த்து இன்னைக்கு தப்பிச்சுட்டீங்க என்னைக்கின்னாலும் உங்களை கொல்லாம விடமாட்டோம்ல என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக 1,2 வது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 427, 506(ii), படியும், 3,4 வரையுள்ள எதிரிகள் பிரிவு 294(b),324, 427, 506(2), கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது தென்காசி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி 1,2 வது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 323, 427, 506(2)ன் கீழும், 3,4 எதிரிகள் இதச பிரிவு 294(b), 324, 427, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

கடந்த 22.10.2014 ம் தேதி மதியம் 18.30 மணிக்கு மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது சண்முகவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 428/2014 இதசபிரிவுகள் 294(b),323, 324, 427,506(2) ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் மனுவின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளதாகவும் புகார் மனு அசாஆ 2 மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 என்றும் பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 22.10.2014 ம் தேதி 19.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் கருப்பசாமி மற்றும் இசக்கி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் அ.சா.ஆ 4 பார்வைமகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் என்றும் பின்னர் சாட்சிகள் சண்முகவேல், இசக்கி, முனியாண்டி, பார்வை மகஜர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் மாரியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் பின்னர் இந்த வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை என்றும் பின்பு புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையானதால் இதச பிரிவுகள் 294(b),323, 324, 427,506(2) ன் கீழ் இறுதி அறிக்கை 05.02.2015 ல் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது

சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்ச்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1,2 வது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b),323, 427,506(ii), படியும், 3,4 வரையுள்ள எதிரிகள் பிரிவு 294(b),324, 506(i), ன் கீழ் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரி, அ.சா.1யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>10. தீர்வு</u> –

22.10.2014 ம் தேதி 15.00 மணிக்கு தென்காசி மேலப்பாறையடி தெருவிலுள்ள 1வது சாட்சியின் வீட்டின் முன்பு, 1 மற்றும் 2வது சாட்சியும் நின்று

பேசிக் கொண்டிருக்கும் போது, மேலே கண்ட எதிரிகள் 4 பேரும் சேர்ந்து கையில் ஆளாளுக்கு கம்பு மற்றும் செங்கலோடு வந்து 1வது சாட்சியை பார்த்து 1வது மற்றும் 2வது எதிரியும் சேர்ந்து என்னல தேவிடியா மவனே நீ என்ன பெரிய ரவுடியால கூதிமவனே என்று அசிங்கமாக பேசியும் எதிரிகள் கையில் வைத்திருந்த கம்பால் சாட்சியின் இடது கால் முட்டுக்கு கீழும் இடது முழங்கைக்கு கீழும் அடித்து சாதாரண காயத்தை உண்டு பண்ணியும், அதை தடுக்க வந்த 2வது சாட்சியை பார்த்து 3 மற்றும் 4வது எதிரி இருவரும் சேர்ந்து நீ என்ன அவனுக்கு சப்போட்டால என்று அசிங்கமாக பேசிக்கொண்டு கையில் இருந்த செங்கலால் 2வது சாட்சியின் வலது கால் பெருவிரலிலும் மூக்கிலும் அடித்து சாதாரண காயத்தை உண்டு பண்ணியும் பின்பு 4 எதிரிகளும் சேர்ந்து 1வது சாட்சியின் வீட்டின் மீது கல்லை கொண்டு எறிந்து சுமார் ரூ.75 மதிப்புள்ள ஜன்னல் கண்ணாடியை உடைத்து சேதத்தை உண்டு பண்ணியும் 1மற்றும் 2வது சாட்சிகளை பார்த்து இன்னைக்கு தப்பிச்சுட்டீங்க என்னைக்கின்னாலும் உங்களை கொல்லாம விடமாட்டோம்ல என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரியின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 சண்முகவேல், தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் தன் உறவினர்கள் என்றும் சாட்சிகள் இசக்கி, முனியாண்டி ஆகியோர்களை தெரியும் என்றும் தான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும் கடந்த 12 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும் எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம் என்றும் நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும் எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும் தற்போது எதிரிளுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை

என்றும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 இசக்கி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் தன் உறவினர்கள் என்றும் அசா.1 சண்முகவேல் தன் தம்பி என்றும் சாட்சி முனியாண்டி தன் அப்பா என்றும் தான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும் கடந்த 12 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் தனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும் தங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம் என்றும் தான் தடுமாறி கீழே விழுந்ததில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும் தற்போது எதிரிளுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்

13. அ.சா.3 முனியாண்டி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் தன் உறவினர்கள் என்றும் அசா.1 சண்முகவேல், அசா.2 இசக்கி தன் மகன்கள் என்றும் இந்த வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். என்றும் மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரி, புகார்தாரரை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது என்றும் மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

14. இந்த வழக்கில், அ.சா.4 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிக்கு எதிரான அசிங்கமாக பேசி,

கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1,2 வது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b),323, 427,506(ii), படியும், 3,4 வரையுள்ள எதிரிகள் பிரிவு 294(b),324, 506(i), கீழ்ன் கீழ் உள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

16. முடிவில், 1,2 வது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b),323, 427,506(ii), படியும், 3,4 வரையுள்ள எதிரிகள் பிரிவு 294(b),324, 506(i), கீழ்ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கின் எதிரிகள் மாண்புமிகு திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை

**18. வழக்குச் சொத்து** –

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026 ம் வருடம் ஜீன் திங்கள் 12 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.12 11:35:11 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | சண்முகவேல் |
| அ.சா.2 | இசக்கி |
| அ.சா.3 | முனியாண்டி |
| அ.சா.4 | திரு. மாரியப்பன், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் மனுவிலுள்ள அ.சா.1ன் கையொப்பம் | 04.06.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் மனு | 05.06.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.4 | அசல் |
| 3 | முதல் தகவல் அறிக்கை | 05.06.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 05.06.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 05.06.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.
**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

MUTHU LAKSHMI
Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.06.12 11:35:16 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**குறிப்பு :–**
1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.